# தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை

## கோவை மாநகராட்சி தகவல்

கோவை, ஜுலை. 28–

கோவை மாநகராட்சி கமிஷனர் லதா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கோவை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதி களில் தெருநாய்களின் தொல்லைகள் இருப்பதாகபொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தெருவில் சுற்றித் திரியும் நாய்களைப்பிடித்துக் கொல்ல சட்டத்தில் வழி யில்லை.

எனவே இந்தத் தெருநாய்களைப்பிடித்து தடுப்பூசிகள் போடப்பட்டும் மற்றும் கருத்தடை செய்யப்பட்டும் வருகிறது.

வெறிநாய் கடியில் இருந்தும், நாய்கள் தொல்லைகளில் இருந்தும், மக்களைக்காக்கும் வகையில் கோவை மாநகராட்சியில் சீரநாயக்கன்பாளையத்தில் செயல்பட்டு வரும் தெருநாய் கருத்தடை மையமும் மற்றும் ரோட்டரி சங்கமும் இணைந்து மாநகராட்சியின் ஒவ்வொரு பகுதியிலும் கடந்த 12.7.2013 முதல் 19.7.2013 வரை முகாம்கள் அமைத்து தெருவில் சுற்றித்திரிந்த சுமார் 3061க்கும் மேற்பட்ட நாய்கள் பிடிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி சீரநாயக்கன் பாளையத்தில் செயல்பட்டு வரும் தெருநாய் கருத்தடை செய்யப்பட்டு நாய்களின் பெருக்கம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. பொதுமக்கள் தெருநாய்கள் தொடர்பான பிரச்சனைகளை சீரநாயக்கன் பாளையத்தில் செயல்பட்டு வரும் தெருநாய்கள் கருத்தடை மையத்திற்கு தொடர்பு கொண்டு விபரம் தெரிவித் தால் அந்த நாய்கள் பிடிக்கப் பட்டு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடப்படும்.

கருத்தடை மையத்தினை 9366127215 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு கோவை மாநகராட்சி மக்கள் பயன்பெறும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

### மழைநீர் சேகரிப்பு கூட்டமைப்பு

கோவை மாநகராட்சிக் குட்பட்ட மண்டல அலுவலகங்கள், பொறியல் பிரிவு அலுவலகங்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவல கங்கள் சார்பில் மொத்தம் 142 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 15–ன் புனரமைப்பு பணி முடிவுற்றுள்ளது. 27–ன் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 100 எண்ணிக்கைகள் புனரமைப்பு பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

மேலும் மாநகராட்சி பள்ளிக்கட்டிடங்களில் மொத்தம் 83 எண்ணிக்கை மழைநீர் கட்டமைப்புகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 5 எண்ணிக்கை புனரமைப்பு பணி முடிவுற்றுள்ளது. 10எண்ணிக்கையில் தற்போழுது புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள 68 எண்ணிக்கை புனரமைப்பு பணி விரைவில் செய்து முடிக்கப்படும். மாநகராட்சிகளில் மொத்தம் 11 மருத்துவமனைகளில் 1 எண்ணிக்கை முடிவுற்றது. 1 எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 9 எண்ணிக்கையில் புனரமைப்பு பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

மேலும் மாநகராட்சிக் குட்பட்ட சாலை ஓரங்களில் மொத்தம் 35 எண்ணிக்கையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 20 எண்ணிக்கையில் புனரமைப்பு பணி முடிக்கப் பட்டுள்ளது.

தற்பொழுது 11 எண்ணிக்கையில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 4 எண்ணிக்கையில் புனரமைப்பு பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

மேற்கண்டவாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.